
Forty Martyrs of Sebaste
Balamand

மார்ச் 10

## *(செபாஸ்ட்) நாற்பது வேத சாட்சிகள் (320)*

நம் புனிதர்கள் அனைவரும் உரோமைப் பட்டாளத்தின் ஒரு பகுதியில் இருந்தனர். நாட்டிற்கு இவர்கள் முக்கியமான சேவைகள் பல செய்திருந்தார்கள். ஒரு முறை குடிக்க நீர் இல்லாததால் வீரர்கள் சங்கடப்பட்டார்கள். இவர்கள் உருக்கமாக செபித்து வீரர்களுக்கு குடிக்க நீர் பெற்றுக் கொடுத்தார்கள். வேத கலகத்தின் போது இவர்கள் தேவதைகளுக்குப் பலியிட மறுத்தனர். அதிகாரி அன்பாக பேசிப் பார்த்தான். பயமுறுத்தினான். அவர்களைக் கட்டி அடித்து விலாப்பக்கத்தில் தோலை உரிக்க உத்தரவிட்டான். அது கடுங்குளிர்காலம், வெறும் உடலுடன் அவர்களை பனிக்கட்டி மீது படுக்கச் செய்தான். அருகில் வெந்நீரில் குளிக்க வசதிகள் செய்து அதில் வேதத்தை மறுதலிக்கிறவர்கள் மட்டும் குளிக்கலாம் என்றான். பனிக்கட்டியில் படுக்கும்படி 40 பேர்களும் சென்றார்கள். 40 பேர்களுக்கும் பரலோக கிரீடம் கிடைக்க வேண்டும் என்று ஒரு மனதாக உருக்கமாக செபித்துக் கொண்டு போனார்கள். “ஆண்டவரே, நாங்கள் 40 பேர் போருக்குச் செல்கிறோம். 40 பேர்களும் வெற்றி வாகை சூடச் செய்வீராக” என மன்றாடினார். போகிற வழியில் ஒருவன் மனம் தளர்ந்தான். கிறிஸ்தவ மதத்தை மறுதலித்தான். வெந்நீரில் குளிக்கத் தொடங்கியதும் அவன் சோர்து வீழ்ந்தான். அருகில் இருந்த காவல்காரன் ஒருவன் காட்சி ஒன்று கண்டதில் வானதூதர்கள் 40 கிரீடங்களைக் கொண்டு வருவதை கண்டான். ஒருவன் செத்து வீழ்ந்ததைக் கண்டதும் அந்த காவல்காரன் பரிசுத்த ஆவியின் ஏவுதலுக்குக் கீழ்ப்படிந்து நான் கிறிஸ்தவன் எனக் கூறி வேதசாட்சியாக உயிர்விட்டு 40.வது கிரீடத்தைப் பெற தகுதி பெற்றான்.

**சிந்தனை:**

அரசு அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும் என்பார்கள். சில சமயங்களில் கடவுளும் உடனே தண்டிக்கார் என்பதை இங்கு காண்கிறோம்.

**செபம்:**

ஆண்டவரே, இறுதி வரை வேதத்தில் உறுதியாக இருக்கும் வரத்தை கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் தாரும்.